





ஓலை 142| ஓசை 265| செப்டம்பர் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



சோமசுந்தர பாரதியார்

(1879 – 1959)

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல்**

## பொருள்

**இச்செயலை இவ்வாறு செய்து முடிக்கலாம் என்று சொல்லுதல் எவர்க்கும் எளியனவாம், சொல்லியபடி செய்து முடித்தல் அரியனவாம்.**

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

**அகர முதல இலக்கியப் பேரவை**

Aagaramuthalaa   www.aagaramuthala.com   aagaramuthala@gmail.com

## பீரம் பேணிற் பாரந் தாங்கும்!

பா வகை: கலித்துறை

முகிலின் தாய்ப்பால் மழைப்பாலால் மண்ணின் உயிர்கள்
மகிழ்ந்து சுமையைச் சுமக்கின்றதோர் வலிமைத் தாங்கும்;
நெகிழ்ந்தே அன்னைப் பிள்ளைக்கினி தாய்ப்பா லூட்ட
மகிழ்ந்தே வலிமை திறமையுடனே வாழ்வைத் தாங்கும்!




நிலவுத் தாயும் ஒளிப்பாலை நிலத்திற் கூட்ட
நிலமாம் பிள்ளை வலிமையுடனே இரவைத் தாங்கும்;
உலவிப் பகலில் செங்கதிரது வெயிலாம் பாலை
நிலத்தி லூட்ட பல்லுயிருமே வலிமைத் தாங்கும்!

மலைத்தாய்ப் பாலாம் அருவிப்பால் ஊட்ட ஆறும்
நிலையாய்ச் சுமையை வலிமையுடனே தாங்கி யோடும்;
அலையாழ்க் கடலின் தாய்ப்பாலினை குடித்தே மீன்கள்
வலையில் விழுந்தும் வலிமையினையே காட்டித் துள்ளும்!

நீரும் எருவே மரப்பிள்ளைத் தமக்குத் தாய்ப்பால்;
வேரும் சுமையைத் தாங்கும்பெரு வலிமைப் பெருமே;
பாரும் தழைத்தே வலிமையினையே தாங்கிச் செழிக்க,
ஊரும் நாடும் அன்பறமெனும் பாலே வேண்டும்!




இவைப்போல் பிள்ளைத் தாய்ப்பாலைத் தாயு மூட்டி
அவையோர் முன்னே வலிமையுடனே தாங்கும் நிலையில்
உவந்தே ஊட்டல் ஈன்றன்னையின் கடனே யாகும்;
சுவையும் உரமும் வலிமையுடனே நிறைந்த துணர்வோம்!

### இலக்கணக் குறிப்பு:

கலித்துறையில் உள்ள பல்வேறு சந்த ஓசைகளில் மா, மா. காய், மா, மா என்னும் சந்த ஓசையில் வந்த தாகும். இப்பாடலின் 2,3,4 ஆம் அடிகளின் மூன்றாம் சீர்கள் கனிச்சீர்கள் வந்துள்ளமை நோக்குக. இப்படிக் கனிச்சீர்கள் வந்துள்ளமையால் இப் பாடல்களைக் காப்பியக் கலித்துறை என்றும் கூறுவர்.

நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

## பா வகை: பஃறொடை வெண்பா

வாழ்வினில் முன்னேற வாகையைச் சூடிட
தாழ்வில் துவளாமல் தப்பைத் திருத்திட
பாழ்செயும் எண்ணத்தைப் பக்குவ மாக்கிட
காழ்ப்பை அகற்றி கடமையை ஆற்றிட
ஆழ்ந்த பயிற்சியை ஆவலாய் மேற்கொள
சூழ்ந்த இடரும் சுழன்றே ஒதுங்குமே
நாழ்விடுத்தே நாளுமே நாட்டம் நிறைத்திட
மாழ்குதல் நீக்கலே மாண்பு.



கவிஞர் செ. கலைவாணி

*தரவு*

அகிம்சையினால் அறநெறியை
அகம்மகிழ விதைத்தவராம்

சுகித்திடவும் சுதந்திரத்தை
சுகமெனவே பதித்தவராம்

பகிர்தளித்து பண்பினையும்
பார்புகழ்திட வகுத்தவராம்

அகிலமதும் செழித்திடவே
அறவழியை விளம்பினாரே

*தாழிசை. ..*

பருத்தியுடையில் ஒற்றுமையினை
பாருலகினில் ஓதியவராம்

குருதியினை
கொடைகொடுத்து
குவளையத்தில் சிறந்தவராம்

உருவமதில் உலகினையும்
உயர்த்திடவே
முனைந்தவராம்

.............2............

விடுதலையின் வேட்கையினையும்
வீறுநடையில் காட்டியவராம்

கடுகளவும் கலங்கமின்றி
கருணையினால் உயர்ந்தவராம்

படுகொலைக்கு அஞ்சிடாமல்
பரங்கியரை எதிர்த்தவராம்

......3.........

உப்பெடுத்திட வரிவிதித்து
உயிர்வதையை செய்தவரையும்

தப்பிடாமலே தடைவிதித்து
தண்டிவழியில் நடைபயின்றார்

அப்பாடுகளை அடைந்தவராம்
அன்புருவான தேசப்பிதாவாம்

*தனிச்சொல்.*
அன்புவழி
*சுரிதகம்..*



அண்ணல் காந்தி
அன்பை சொல்வோம்

எண்ணம் யாவும்
ஏற்றம் காண்போம்

கண்ணில் நிற்கும் காந்தி மகானை

விண்ணில் ஏற்றியே
வியப்போம் நாளுமே.

கவிஞர் தி. செல்வராணி, திட்டக்குடி

## பா வகை: ஆசிரியத் தாழிசை

ஊக்கம் கொண்டே  உயர்வுடனே வாழ்வோர்
ஆக்கம் பெற்றே அகிலமும் வெல்வர்
தேக்கம் இன்றியே தேடிச்செல்வர் நல்வழி

பண்புகள் பெற்றே பணிவுடனே வாழ்வோர்
திண்மை கொண்டே திறம்பட வெல்வர்
மண்ணிலே என்றும் மாண்புடனே நிலைப்பரே

அரிய திறமையும் ஆளுமையும் இருந்தால்
புரியும் செயலால் புவியினை வெல்வர்
உரிய சிறப்பும் உரித்தாகும்  இவருக்கே



கவிஞர் விஜயலஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

# கரூரோடு கலையட்டும்

திட்டமிடலில் தெளிவின்மை
தோல்வியைப் பரிசளிக்கிறது
பலியெடுக்கும் அரசியல்

அதிகார போதை
அதிகரிக்கிறது பலி
அரிதாரப் பூச்சின் அரசியல்

கடவுளெனக் கொண்டாட்டம்
காணுமிடமெங்கும் போர்க்களம்
அரசியலில் அரிதாரத்தின் மயக்கம்

அரசியல் பழகு
குழந்தைகள் பலி
பிம்பத்தின் பிரச்சாரம்

நீண்ட காத்திருப்பு
நீளும் நெரிசலுக்குள்
ஒளிகிறது அரிதாரம்

அதிகார அரசியல்
அடிபணிந்து விடுகிறது
அப்பாவியின் மோகம்

அவசர நுழைவு
அதிகார ஆசைக்குப் பலி
அரசியலில் நடிப்பு

ரசிகனின் மோகம்
மரண வெள்ளத்தில் நீந்துகிறது
கீழ்ப்படியாக் கூட்டம்

நகரும் பிரச்சார வாகனம்
நகரவேயில்லை
அரிதார மயக்கம்

மக்கள் சேவைக்கு ஏக்கம்
பெருகும் கட்சிகள்
மரணக் காட்சிகளில் ஊர்வலம்

நடிகனின் வரவு
நடுங்குகிறது அரசியல்
பலியாகும் பாமரன்

கரூரில் தொடக்கமல்ல
கடைசியாக இருக்கட்டும்
கவர்ச்சியின் மீதான மயக்கம்

நெரிசலைத் தவிர்ப்போம்
பகுத்தறிவைத் துறந்து
பாடத்தில் தோல்வி

இலவசங்கள் படையெடுக்க
திரைக்காட்சிகள் மறக்கடிக்க
போதையில் தொலைகிறது பகுத்தறிவு.


பகுத்தறிவு அரசியல் பெருக
கரூரோடு கலையட்டும்
அரிதாரத்தின் போதை.



கவிஞர் இளையவன் சிவா

# அநாவசியம்

வயது கடந்தும் வாழவில்லை
நாட்கள் சென்றும்
தொட்டதை முடிக்கவில்லை
காலமும் கற்கிறாய்
கண்டது தான் என்ன?
ஓடியோடி உழைக்கின்றாய்
உட்கார்ந்து ஏன் உண்பதில்லை?
எழுதிக்குவிக்கின்றாய்
அலட்சியமாய் எதற்காக ?
அடுக்கலையும்
அகப்பையும் மட்டுமே
பெண்ணவளின் அட்டியலாய்
தொங்குவதை
விரும்பாதவள் தான்
இத்தனை கடந்தும்
சலிக்காமலே
வாழ்ந்து விடுகிறாள்
எவரையும் அஞ்சி நடப்பவளல்ல
எதையும் விஞ்சி நடப்பவள்



கவிஞர் ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான், புல்மோட்டை (இலங்கை)

# பயணங்கள்



பயணங்கள் பல விதம்
ஒவ்வொன்றும் ஓர் அனுபவம்
பயணங்களை
நிலைப்பட செய்வது வாழ்க்கை
வாழ்வை கூட நாம் பயணம்
ஆகவே கடக்கின்றோம்

போராட்டங்கள் பல இருந்தும்
ரசிக்க கூடிய ரம்யமான
இடங்களுக்கு செல்கையில்
நம் துன்பங்களை சுமக்கும்
வலிகளை மறந்து விடுகிறோம்

பயணமான இதயத்தை இதயமாக்கின்றது
சுதந்திரத்தை வரவழைக்கின்றது
புதுவரவு,அழகிய பாதை,இயற்கை அன்னையின்
படைப்பை ஆங்காங்கே என்னை சூழ்ந்து கொள்ளவே
என் கவலைகளும் மறக்கடிக்கப்படுகின்றது
பயணங்கள் என்றும் முடிவதில்லை

வாழ்க்கை முடிவடைய முன்னமே
நாம் ரசிக்க வேண்டிய
அழகிய பயணங்களை சுதந்திரமான
காற்றுடன் தொடர காலம் தடை போடக்கூடாது
பயணங்கள் இனிதே தொடரட்டும்

கவிஞர் எ. எம். முர்ஷிதா பேகம், கண்டி (இலங்கை)

மழலையின் சிரிப்பு மயிலோசை போல
வயலோர விளையாட்டு வானம்பாடி சுகம்.

வானத்தில் பறக்கும் பட்டம் கனவாய்
மரக்கிளை ஊஞ்சல் மனம்தோறும் இனிப்பு.

குழந்தைத் தோழ்களின் கூச்சல் இனிது
கண்ணீரும் சிரிப்பும் கதை சொன்ன காலம்.

அம்மாவின் அரவணை தேனினும் நலம்
அந்த நாள் நினைவு உயிரோடு வாழ்க.



கவிஞர் ம. ஹரீஷ், பாலூர், செங்கல்பட்டு மாவட்டம்

# உனக்கு ஒரு மந்திரம்

தீபமாய் ஒளிவீசு.
பூவாய்ச் சிரித்துமகிழ்.
ஆகாயமாய் அன்பைப்பொழி.
அலையாய் விடாமுயற்சிகொள்.
தீமைக்கு தீயாய்எழு.
சுதந்திரக் காற்றாய்வாழ்.
கனிவில் நீராய்இரு.
நிலவாய்ப் பால்மனம்கொள்.
சுறுசுறுப்பில் தேனீயாய்இரு.
எறும்பாய் ஓய்வின்றிஉழை.
விழுந்தாலும் மண்ணில்
விதையாய்விழு.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# வாழ்க்கை ஓர் அனுபவம்

கரைந்து போன காலங்களை
நினைவு கூர்ந்து
அசைபோடும் பொக்கை வாய் கிழவனின்
வார்தைகள் ஓர் அனுபவம்.

வீட்டு மூலையில் தனிமையில் கிடக்கும்
படுக்கை நாற்காலியில் படுத்துக்கொண்டே
சிந்திக்கும் பதவி ஒய்வு பெற்ற
மனிதனின் வாழ்வு ஓர் அனுபவம்.

எதையும் அனுபவிக்காத
எச்சில் இலையின் பருக்கைக்காக
அலைந்த பிச்சைக்காரனின் பசி ஓர் அனுபவம்.

பயணச்சீட்டு பெற்று இருக்கையின்
முகப்பில் இருக்கும் இன்னொருவரின்
கதையைக் கேட்டு கண்ணீர் விடுவது ஓர் அனுபவம்.



சிறைச்சாலை கம்பிகளின் வெளியே
சிறகடிக்கும் கைதிகளின்
கற்பனை ஓர் அனுபவம்.

வெற்றிலை இடித்துக் கொண்டே
திண்ணைக் கதையில் வாழ்க்கைக்கு
தீர்வு தரும் பாட்டியின் பக்குவம் ஓர் அனுபவம்.

மாறுபட்ட மனிதர்கள் வேறுபட்டு இருந்தாலும்
மனித வாழ்வு கற்றுத்தரும் கடைசி பாடம் ஓர் அனுபவம்.

கவிஞர் தி. கமலவேணி, மானியம் ஆடூர்

மாற்றம் தேடி வந்தவர்களை
மரணம் கூட்டி சென்றது.

ஆர்வத்தோடு வந்தவர்கள்
அழுகையோடு சென்றார்கள்.

அரசியல் பேசிய இடத்தில்
அழுகின்ற மரண ஓலம்.

அவரைகாண வந்த
அவர்கள் மீது தவறா?
அலட்சியமாக நடநதுகொண்ட
அரசின் மீது தவறா?



கவிஞர் ராஜேஷ் தமிழன், அரியலூர்

பேரின்னல் சூழ்ந்திட
போக்கிடம் அறியாமல்
பிதுங்கி மடிந்த தளிர்கள்.
நிறம் மாறிய அந்தி
நிரை தின்ற நெருக்கடி
விசும்பு அதிர ஓலமிடும் திரள்
வெம்பி நிற்கும் வஞ்சி.




கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

எதையெல்லாம்
சாதிக்க நினைக்கின்றோமோ
அதற்கெல்லாம்
முதலடி எடுத்து வைத்து
நகர ஆரம்பிப்போம்;
எதுவுமே செய்யாமல்
உறங்கிக்கிடக்கும்
கோழைத் தனத்தைவிட
எதையாவது செய்ய
முயற்சிக்கும் வீரமே சிறந்தது.



கவிஞர் அதீனா அபூ உபைதா, ஓட்டமாவடி (கிழக்கிலங்கை)

# கண்ணின் ஈரம்

தனக்கென்ற ஒரு இதயம் துடிக்கும் வரை.
இதயமே இல்லாதவர்களிடம்தான்
அன்பிற்காக ஏங்குகிறோமே.
கண்ணீரை துடைக்க
ஒரு மனம் தேடுகிறோம்.
ஆனால் கண் கலங்கியதற்கு
காரணம் அவர்களே.
ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சியை
தேடியே அலைகிறோம்.
நம்மிடம் இருப்பதை மறந்து விடுகிறோமே.
தொலைத்து விட கூடாது என.
எண்ணிய உறவுகளிடமிருந்து
ஒதுங்கி நிற்கிறோமே.
காலத்தின் மாற்றமே
உறவுகளின் இடைவெளி
நினைவுகளே நிஜத்தின் கொடுமை!



கவிஞர் மா. மோனிஷா

# பனித்துளி

இயற்கை அன்னையின்
முகத்தில் மூக்குத்தி பூக்கள்

பச்சை புற்களின் காலைநேர
கண்ணீர் துளிகள்

மலர்களின் இதழ்களில்
இயற்கையின் முற்றுப்புள்ளி

செடிகளின் உடலில்
வெண்மையின் பாதயாத்திரை

குளிர்கால காலையின்
வானவில் வணக்கங்கள்

சூரியனை கண்டதும்
மறையும் வேதனைகள்

சில நொடிகளில் மரணம்
என்றே தெரிந்தும்

காலைநேர கவிதைகளாய்
பனித்துளிகள்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

வளைய வந்து
அளவளாவி
கதைகள் பேசி
கருத்துகள் பரிமாறி
தட்டிக்கொடுத்து
தடவிக்கொடுத்து
அன்பைக்காட்ட மறப்பதில்லை
அன்புள்ள அப்பா
ஒவ்வொரு நாளும்
உழைப்புக்கு உதவும்
அவர் வண்டியோடு!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

புத்தகம் வாசிப்போம் புத்துணர்வு கொண்டே
எத்தனமாய் இல்லமல்  எழுதியும் பார்ப்போமே
வருங்கால வசந்தத்தின் வளமை நிகழ்வாய்
பெருமை கொள்ளுமே பெரிதான மனமாய்

நல்ல நூல்களும் நன்மை பயக்குமே
கலவை கொடுத்து கண்ணில் மலருமே
விடியல் தந்திடும் விந்தை வாழ்வில்
துடிப்பான மனதைத் தூண்டுமே ஆர்வமாய்

சிறு வயதினில் தொடங்கும் படிப்பு
மறுபடியும் மனதை மகிழச் செய்யுமே
நமது எழுத்தின் வடிவம் தொடர்ந்து
கமழும் வாசனை கற்பவர் வடிவத்திலே

புரிந்து வாசித்தல் புகட்டுமே அறிவை
சரியான உச்சரிப்பும் சமத்துவமே மனதில்
திறமைகள் பெருக்குமே திரளான வரமாய்
அறமாய் செழிக்குமே அமைதியின் வழியிலே

எண்ணற்ற நூல்களை எழுதிய மாந்தரும்
கண்ணாய்  கருத்தாக களைந்தாரே மடமையை
அமைதி அளித்து அயராது சிறக்கும்
சுமைகள் தீர்த்து சுகமும் வழங்குமே

காலத்தால் அழியாத கணக்கில்லா புத்தகமும்
ஞாலத்தில் உயர்ந்து நன்மை பயக்குதே
ஆர்வம் கூடினால் ஆனந்தம் பொங்குமே
தேடுதல் நிறைந்து தேற்றுமே பணியில்

மனப்பாடம் செய்தல் மனதில் நிலைத்தே
தினமும் நிலைக்குமே திரண்ட அலையாய்
குற்றமும் களையுமே குறைவின்றி நிலையாய்
ஏற்றம் கொடுக்குமே ஏழ்மையை விலக்கியே



கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# வாழ்வின் வேர்

வாழ்வின் வேர் எது?
பற்று எனில்
எதன் மீது பற்று?
யார் மீது பற்று?

உயிர் மீது பற்றா?
உடமையின் மீது பற்றா?
கனவின் மீது பற்றா?
கலையின் மீது பற்றா?

தன் மீது பற்றா
தன் புகழ் மீது பற்றா?
தன் சுயத்தின் மீது பற்றா?
தன் சுக துக்கத்தின் மீது பற்றா?

பற்றிப் படருமா ?
விட்டு விலகுமா ?
எதுவரை தொட்டுத் தொடரும்?
எப்புள்ளியில் விட்டு விலகும்?



இரவிலே வெளியேறினான் சித்தார்த்தன்!
வெற்றிக்கு பிறகு விலகினான் அசோகன்!
சிறை மீட்ட பிறகு விலக்கினான் இராமன்!
அரசவை கிடைத்தும் விலகினான் பரதன்!

வெளிச்சத்தின் வேர் இருளில் விரவி கிடக்கு
பாசத்தின் வேர் ஆழ் மனதில் உறைந்து கிடக்கு
உறவின் வேர் புரிதலில்!
காதலின் வேர் மௌனத்தில்!

பற்றிப் படர்வதும்
விட்டு விலகுவதும்
ஆழ்ந்த அன்பின் பால்!
அதுவே அர்த்தம் பொதிந்த வேர்!
பற்றே வாழ்வின் ஆனி வேர்

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு, திருச்சி

# அமுதைப் பொழியும் நிலவே



அந்திவானத்தில் ஒளிரும் அழகான வெண்மதியே
மேகத்தினூடே ஒளிந்து கண்ணாமூச்சு ஆடுகிறாய்
நட்சத்திரத் தோழிகளுடன் வானில் வலம் வருகிறாய்
கவிமனதில் கற்பனை ஊற்றெடுக்க
வைத்திடும் வெண்ணிலவே
மாதத்தில் பாதிநாட்கள் காணாமல் போவதென்ன
முழுநிலவாய் முகம் காட்டி மகிழ்வுறச் செய்கிறாயே
தென்றல் தவழ்ந்திட குளிரும் உனது நிலவொளியே
அமுதைப் பொழியும் நிலவே
ஆனந்தம் உண்டாகிடுமே உள்ளமும் உற்சாகமாகுமே
நிலாச்சோறு உண்டு களித்திடுவோம் நாங்களே
ஒற்றுமை உணர்வுதனை வளர்த்திடும் முழுமதியே
பெண்ணாய் மதித்திடும் பூமியில் ஆரவாரமே
காதலர்கள் களிப்புறும் இன்பமான வேளையே
தம்பதிகள் கரங்களும் இணைந்திடும் உன்னொளியிலே
வேற்றுமை பாராது அன்பு கொள்ளும் உறவுகளே
வானத்து தேவதையாய் உலா வந்து
அமுதைப் பொழியும் நிலவே
சிந்தையில் ஆயிரம் எண்ணங்களை
வண்ணமாக்கிடுவாயே
சிந்தனையில் நிறைந்தாயே
வாழ்க்கையில் இனிமையானாயே.

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

தென்றலே தினம் வீசு !
தெற்கத்திய கதை பேசு!
தென்காற்றே இதழை உரசு!
தெளிவான மொழியிலே கொஞ்சு!

வானளாவிய கனவே நிலம் தந்தே
வானவில்லின் நிறங்களாய்
வாசம் கொண்டே வா.
வாழ்நாளெல்லாம்
மகிழ்ச்சி ஒளிபரப்ப வா!



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# நம்பிக்கை

சொல்லாமல் சொல்கிறது;
மனதின் தேடலை!
ஆழ்மன அச்சத்தை
நாளும் வெறுமையை
எப்படியும் வெல்ல முயலும்
முயற்சி முனைந்து நிற்க
கனிந்து கையகப்படும் வாகை;
தெரிகிறது கரு நீலவானின்
நம்பிக்கை மின்னலில்



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# பிறப்பும் இறப்பும்

பிறந்தது எதற்கென அறியாது பிறந்தேன்
வளர்ந்தது எதற்கென அறியாது வளர்ந்தேன்
வாழ்வது எதற்கென அறியாது வாழ்ந்தேன்
இறப்பது எதற்கென இறக்க மனமில்லை

இறப்பின் எச்சமாய் தொடர்வதா பிறப்பு
பிறப்பின் முடிவான முடிவா இறப்பு
பிறப்பின் நிகழ்வில் அழுவது எதற்கு?
பாழும் உலகில் பிறந்தோம் என்றா?

இறப்பின் நிகழ்வில் அழுவது எதற்கு?
செல்வத்தை விட்டுச் செல்கிறோம் என்றா?
மனையாளை மகவுகளை பிரிகிறோம் என்றா?
இன்னும் வாழ்வை வாழவில்லை என்றா?

பிறப்புக்கும் இறப்புக்கும் இடையேயான வாழ்வில்
கல்வியை கொடுத்து பசியைப் போக்கி
இயற்கையை காத்து மனிதனாய் வாழ்ந்திடு
பிறப்பில்லா இறப்பாய் வீடடைந்து மகிழ்வாய்

கவிஞர் சென். இலக்குவன், (செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# வாழ்தலும் இருத்தலும்

வேர் பரப்பி கிளை விரித்து
இருப்பைத் தக்க வைத்தலே
இன்று இன்றியமையாதது!
இன்னல்களுக்கு இடையில்
போராடி வாழ்வதற்கு நம்மை
நிலை நிறுத்த, இருத்தல் வேண்டும்!
இருப்பைத் தக்க வைத்து
வாழ்ந்ததற்கு அடையாளமாய்
இருப்பை சிறப்பாய் வடிவமைத்து
வாழ்தல் இன்னும் மதிப்பு
மிக்கதாய் அமைந்திடும்!
அன்பு மனமும், கருணை உள்ளமும்
இரக்க குணமும் கொண்டு
நாலு பேருக்கு நல்லது செய்திட!
வாழ்வாங்கு வாழ்ந்திடலாம்!
இருத்தலும், வாழ்தலும்
அவரவர் நடத்தையிலே!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை

# உலா போகும் நிலா



உயரத்தில் உலா போகும் நிலா
வானில் தெரிவதில்லை அதன் அழகு
தரணியே  தாகத்துடன் நாடுகிறது
தண்மையில் மகிழ்ந்து ஆடிப் பாடிட!

அன்னம் ஊட்டி அமுது படைக்கிறாள்
அழும் குழந்தைகளை கதை கூறி
வசப்படுத்துகிறாள்
முற்றத்தில் முன் நிற்பாள்
காதலகர்களுக்கு  தனிமையை கொடுத்து
கனவில் மீட்பு அளிக்கிறாள் மதி

அத்திக்காய் காய்ந்தது அந்தகாலம்
இத்திக்காய் காயாமல் முடக்கியது
இந்தக் காலம்
மாடிக்கு மேல் மாடி கட்டி
விண்ணைத் தொடும்  விருத்தி
வெண்மதி தேடியே தரையில்
நிற்பர் நம்மவர்!

ஓடி ஓடி போனாலும்
அது நம்முடன் நடைபோடும்
போ போ எனச் சொன்னாலும்
அது கேட்பதாயில்லை
நல்ல தோழனாய்  நானும் உள்ளேன்
நலம் தருவேன் உனக்கு நானே
தொலைதூரத்தில் நீ இருந்தாலும்
உன்னை நினைக்கிறேன் நான்
மின்சாரம் தடை
முற்றத்தில்  உனை நோக்கி
முழந்தாள்படியிடுகிறேன் நான்
உன்னை வரவேற்றிட

கவிஞர்  திருமதி.ஜ.கிங்ஸ்லி, கல்முனை



பத்துநாள் கருவறையில்
இளம் சிசு!
விதியின் பரிசு
விதவை கோலம்!
ஒரு தாயின்
போராட்டம்!
ஒரு இளம் சிசுவின்
எதிர்காலம்!
எத்தனை சோதனைகள்
காத்திருக்கிறதோ?
எத்தனை வேதனைகள்
தாங்குவளோ?
அந்த இறைவனுக்கு
இவ்வளவுதான் கருணையா?
அவளின் விதியை
தலையில் சுமக்கிறாள்?
தலைவிதி என்று!
எத்தனை நாள்
மனசுக்குள் குமுறி இருப்பாள்?
எத்தனை நாள்
தூக்காமல் அழுத்து இருப்பாள்?
அவளை ஒரு முறை
சிரித்து வைத்து பார்க்க
வேண்டும் என்ற மட்டும்
என்னோடு தொத்தி
விட்டது ஒரு எண்ணம்?
ஒரு வாய்ப்பு
கிடைத்தால் போதும்
ஒரு முறை அவளை
சிரிக்க வைத்து
அணைத்துக் கொள்வேன்!

கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

# காத்திருப்பு


உமிழ்ந்து கொண்டே இருக்கின்ற
விளக்குக்கு தெரியாமலே
வலி சுமந்த நினைவால்
அமிழ்ந்து போனது திரி!
இதயத்தின் வலி மிகும்போதெல்லாம்
கண்ணின் கரிப்புச் சுவை
காட்டிக் கொடுத்து விடுகிறது!

அடிக்கடி மைபூசிக் கொள்வதால்
அலங்காரம் கூடிப் போய்
வண்டுகள் தேனெடுக்க
விழி அம்புகளில் நீர் தெளிக்கும்
கவிதைக் கச்சேரி
கணந்தோறும் நடக்கிறது!

ஊர் தோறும் பேச்சு
ஓலைப்பாயில் பெய்த மழையாய்
நீண்டு விட்டது!

விழிக்குளத்தில் விழுந்த நீ
விரகத்தை இறைப்பதால்
மனம் மெழுகாய் உருகியதை
மறைக்கப்போட்ட நாடகம் இதுவென
எப்படிச் சொல்வது?

நீளும் இரவுகளில்
இதயத்தோடு சேர்த்து
என்னையும் நனைத்துக்கொண்டதை
கொல்லைப்புறக் கிணற்றின்
வியர்வை சொல்கிறது!
காத்திருப்பு மட்டும் நீள்கிறது
உன்மேல் நீங்காத காதலாய்.



கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

# என் கன்னி யாழ்!

தினம் தினம் அவளின்
முக ஓவிய பின்னணியில்
இந்தக் கள்ள மனம்
கற்பனை கொண்டது
தீராத கவிதாஞ்சலியாய்
கண்ணீரின் தில்லையில்
அவளின் ஒரு பார்வை
இன்று வரை என்னை
செயல்பாடு இல்லாமல்
செதுக்கி கொண்டிருக்கிறது
இரக்கமற்ற அவளின்
நினைவுகளில் அசை போடுகிறது
என் உடல் மொழி
ஒவ்வொரு விதமாக நோய் பட்டு
நொடிப்பொழுதும்
அவளின் நினைவு பின்பங்கள்
பிழை இல்லாமல்
எதிர்நோக்குகிறது என்னவளின்
தோற்றத்தில் மாற்றத்தை காண
மனம் வாடுகிறது
மங்கையின் மனதை
தினம் தேடுகிறது அவள்
என் கன்னி யாழ்!



கவிஞர் ம. செல்லமுத்து, நூத்தப்பூர்

# திருஷ்டி

ஊர் முச்சந்தியில்
சிதறிக்கிடக்கிறது
திருஷ்டிக்கு உடைத்த
பூசணிகாய் சிதறல்
வண்டியில் வந்தவனுக்கு
எலும்பு முறிவு



கவிஞர் முனைவர். அக. வீரவன்சாரா, சிதம்பரம்



அமைதியான மனதின் பயணத்தில்
அழகான நினைவுகள் புத்தகம்.
ஆசையின் கையகத்தில்
ஆதரவாக உடனிருக்கும் புத்தகம்.

இரயில் பயணத்தின் துணையாக
இரசிக்க வைக்கும் புத்தகம்.
ஈரெட்டு ஆண்டுகள் மட்டுமல்லாது
ஈரநிலமாக ஈர்க்கும் புத்தகம்

உள்ளத்தின் சுமைகளை குறைத்து
உற்சாகம் தரும் புத்தகம்.
ஊஞ்சல் ஆடும் மனதிற்கு
ஊன்றுகோலாகும் புத்தகம்.

எண்ணிய பொழுதுகள் கரைந்திட
எழுத்துலக காவலன் புத்தகம்.
ஏகாந்தமான வேளையில்
ஏட்டில் தனை மறக்கும் புத்தகம்.

ஐம்பெரும் காப்பியங்கள் அறிந்திட
ஐம்பதிலும் படித்திட ஆசை புத்தகம்.
ஒரு புத்தகத்தின் பயணம்
ஒவ்வொரு அனுபவம்.

ஓசையின்றி உள்நுழைந்திடும் மாயம்
ஓய்வுதனை அழகாக்கும் புத்தகம்.
ஔவையின் அதீத தமிழின் நேசம்
அஃதே எந்தன் இதயத்தின் சுவாசம்.

உலகம் முழுவதும் சுற்றினாலும்
தாய் மடிதேடும் குழந்தையின் பாசம்.
தன்னிலை அறியும் புத்தகம்
தரணியில் கால்பதிக்க உதவிடும்.

தமிழை வாசிக்கும் பயணங்கள்
என்றும் இனிமை
அதன் அனுபவமோ தினம் தினம் புதுமை.

கவிஞர் குணசுந்தரி சிவா, காஞ்சிபுரம்

# விடுதலை





மொட்டு மலரும் பொழுது
அதில் சிறைப்பட்டு இருந்த
மணம் விடுதலையாகிறது!

ஒவ்வொரு விடியலிலும்
இரவெல்லாம் சிறைப்பட்ட
ஒளி விடுதலையாகிறது!

தாய்மையின் பிரசவத்தில்
கருவறையில் சிறைப்பட்ட
குழந்தை விடுதலையாகிறது!

தூரிகை வண்ணங்கள்
சிந்தையின் ஓவியமாய்
விடுதலையாகிறது!

ஞானத்தை அடைந்தவரின்
மனம் துன்பத்தில் இருந்து
விடுதலையாகிறது!

விடுதலை என்பது
உயிர்களின் அடிப்படை உரிமை!

விடுதலைக்காய் இன்னுயிர்
நீத்த மாவீரர்கள்
தெய்வங்கள் ஆகிறார்கள்!

மரத்தில் உதிரும் சருகுகள்
கட்டுகள் நீக்கி விடுதலையால்
பூமியை தொடுகின்றன!


வீரத்தின் பெருமை வில்லில்
வெளிவரும் அம்பின் விடுதலை!

அருவி என்பது
மலை முகட்டில் தண்ணீர்
பெற்ற விடுதலை!

அன்பு என்பதோ
அகிலத்தின் உயிர்களின்
விடுதலை!

மனித நேயம் ஒன்றே
என்றும் மாண்பான
விடுதலை!

கவிஞர் கவி. சுகரத்னம், (இரா. தியாகராஜன்) திருவொற்றியூர்



வானமும் இரவும்
பேசிக் கொள்ளும்
ரகசியம் என்னவோ

அமைதியை தழுவி
ஆழ்ந்த தியானமோ

அந்த நேரங்கள்
சத்தங்கள் சற்று
நிறுத்தப்படுகிறதோ

ரகசிய மொழித்தீற்றல்
அங்கே

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி

# நீ நிதானித்தால்



உடல் ஓரிடத்தில்
இருப்பினும் கலவரமான
இந்த உலகை விட்டு சிட்டாய்ப்
பறக்க மனம் எத்தனிப்பது
நிதர்சனம்தானே.

என்றாலும் எண்ணங்கள் அலை
பாய்வதை நம்மால்
தடுத்திட முடியாதெனினும்
நம் மனதை சாந்தப்படுத்த
நம்மால் தான் முடியும்.

ஒன்றா! இரண்டா!
ஒன்றுக்குப் பின்
ஒன்றாக தொடராய்
வரும் பிரச்சனைகள்
சமாளித்தே கலங்கிப்
போகின்றது உள்ளம்.

சோர்வைக் கூட
வெளிக்காட்ட
அஞ்சி அஞ்சியே
இதழோற புன்னகையோடு
தன் நாட்களை கழிக்கின்றன
பல இதயங்கள்.

சோர்வை பூட்டி
இதழோரம் புன்னகையை
படரவிட்டு சமாளிக்காது இயல்பாய்
தம் நெருங்கியவர்களோடு
மனது விட்டு பேசுகையில்
புது வித இன்பம் மனதிற்கு கிடைக்கும்.

மன அழுத்தத்தைக்
குறைக்க பொழுதுபோக்கே
கதியென ஆன போதும்
அதிலும் வந்து எட்டிப் பார்க்கின்றன
சில எண்ணங்கள்.

என்ன தான் நடந்தாலும்
ஐந்து நிமிடம் விழிகளை மூடி
நிதானமானால்
மனம் சற்று அமைதியாகுமே.


கவிஞர் ரஸ்னா ரமீஸான், அக்குறணை, கண்டி (இலங்கை)

நீண்ட நெடிய வாழ்வெல்லாம்
நீங்காத நினைவுகளாய்
இதயம் தொட்டு நிறைந்திடவே
அன்பு என்னும் சுவாசம்தான்
வாழ்வென்றும் இன்பம்தான்.

நீர் குமிழி வாழ்வெல்லாம்
நிலையான "கல்வெட்டாய்"
நிலைத்திடும் காலமே.
அறமாய் வாழும் மனிதன்தான்
காலம் கடந்தும் வாழ்வானே.

புறங்கூறி வாழ்வதும்
பொய்யாக வாழ்பவனும்
காலத்தால் என்றுமே
புறம் தள்ளப்படுவானே
காலம் கடந்தும் கவிதையாய்
இனிமை சேர்க்கும் வாழ்விலே
நட்பு என்னும் உறவுதான்
"தாங்கிப் பிடிக்கும் தூண்தான்".

வாழ்க்கை என்னும் நதிதான்
காலம் கடந்த கவிதைதான்
வாழும் முறை அறமானால்
சந்தோஷ கடலிலே ஆர்ப்பரிக்கும்
அலைகளாய் ஆனந்தம் பிறக்குமே.



கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாதோப்பு

மழை
பொழிந்து தீர்க்கிறது
மூழ்காமல் புன்னகைக்கிறது
கரையோர
காகிதக் கப்பல்கள்

கவிதை வரிகள்
கச்சிதமாக
முடிந்த கர்வத்தின்
விளிம்பில்
வந்து அமர்கிறது
ஒரு வண்ணத்துப்பூச்சி



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# வாழ்வின் நெருடல்கள்!



உறவின்றி சிலகாலம்
உறவோடு சிலகாலம்
சுயம்புவாய் சிலகாலம்
விதியின் நியதியே வாழ்வாக!

சிறுசிறு மகிழ்வுகள்
சப்தமும் வெளிச்சமும்
இருந்தும் இல்லாதிருக்க
மனதில் வெற்றிடமே நிரந்தரமாக!

சிறுசிறு ஆறுதல்கள்
நெஞ்சோடு வருடும்
நிரந்தரம் என்றிருக்க
ஏதுமில்லை நிரந்தரமில்லா இவ்வுலகில்!

உறவின்றி உறவோடு
பற்றின்றி பற்றோடு
தனிமரமாய் வேரற்று
உயிரோடு உயிரற்று
கலந்தே கடக்கின்றன காலங்கள்!
காலம் நிறைவாறாதாவெனும் தவிப்போடே!
எனது காலம் எங்கே?
இவ்வுலகில் பயணிக்கிறது!

பாறைக்குள் தேரையாய்
கனிகளுக்குள் விதையாய்
பூமிக்குள் (நிலத்தடி) நீராக
கருமேகத்தினுள் மழையாக
நிழலாய் நானிருக்க உருவின்றி!
நிஜமாய் இசைந்திருக்க வழியுண்டோ!
எனது வாழ்வு இங்கே
அமிழ்ந்தே கடக்கின்றது!

உம்மையே நம்பியிருக்கிறேன் இறைவா
ஊழி காலம் வாழ்விப்பீர் - மன நிறைவோடே!

கவிஞர் செல்வக்குமரன் சுரேஷ்குமார், சீனா

# மகளுக்காக



கண்ணே கனியமுதே
நான் கண்ட அற்புதமே!

மணியே மாசில்லா மாணிக்கமே
நான் காணும் மதியழகே!

விழிகளில் நிறைந்து நின்று
விந்தைதனை பொழிபவளே!

அசட்டுச் சிரிப்பில்
அமுதூட்டி மகிழ்பவளே!

சிறு புன்னகையில் எனக்கோர்
புதையலாய் வந்தவளே!

நடை பயிலையில்
நர்த்தனமாடிய நந்தவனமே!

பொய்க் கோபம் கொண்டு
போதுமெனும் அன்பைத் தருபவளே!

அன்பெனும் மந்திரத்தில்
ஆகாயத்தினும் உயர்ந்தவளே!

கண்ணே கனியமுதே
எனதன்பு மகளே!

நீ நினைத்திடும் நன்மைகள் யாவும்
ஈடேற வாழ்த்துகிறேன் உன் அன்னையுமே!

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# உயர்வும் தாழ்வும்!



ஓயாது  வீழ்ந்தெழுமே அலைகள் விரிகடலில்!
உயர்வும் தாழ்வும் வாழ்க்கைப் பயணத்தில்
இயல்பாகத் தொடர்ந்து படிப்பினையைத் தந்திடுமே!
உயர்வால் பெருமை கொள்ளுவதும், தாழ்கையில்
அயர்வுடன் மனந்தளர்ந்து சோகத்தில் மூழ்கலும்
இயல்பெனினும், தவிர்த்திடலே நலம் பயக்கும்!
உயர்வென்பது உள்ளத்தனையது என்றிடும் வள்ளுவமே!
வெயிலில் நிழலினைத் தேடும் நெஞ்சம்
புயலுக்குப்  பின்னர் வெயிலைத் தேடிடுமே!
அயராது முயன்றால் வெற்றிகள் கைகூடும்!
மயர்வுதரும் தோல்விகள் வெற்றிக்கு வித்திடுமே!
ஆய்ந்தாய்ந்து கொண்ட கேண்மையினால் எந்நாளும்
துயரம் என்பதில்லை! உயர்வுக்கு வழிவகுக்கும்!
காய்தலும் உவத்தலும் இன்றி ஒருபொருட்கண்
ஆய்தலே அறிவுடைமை! உயர்வுக்கு அடிகோலும்!
தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்! —பொய்யாமொழி!
இயலாது எனக்கருதி முயலாமல் இருக்காதீர்!
உயர்வளிக்கும் தளரா உழைப்பே எந்நாளும்!
பொய்யின்றி ஒழுகுதல் வாழ்வில் உயர்வளிக்கும்!
உயர்கையில் மயங்காத மதிநலன் வேண்டும்!
தயங்காத முயற்சி தாழ்கையில் வேண்டும்!
மெய்வருத்தம் பாராமல் அயராது முயல்பவர்கள்
செயற்கரிய செய்த பெரியோர்கள் ஆகின்றார்!
உயர்வும் தாழ்வும் உள்ளத்தால் வரும்மாற்றம்!
தூய மனத்துடன் துவளாமல் முயன்றாலே
வையத்தில் துயரின்றி வாழ்ந்திடல் எளிதாகும்!

கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

### அப்படியும் இப்படியும்



பெரும் தோல்வியிலும்
மிகுந்த இழப்பிலும்
கட்டுங்கடா சோகத்திலும்
சொல்லில் அடங்கா
அவமானத்திலும்
வேகம் எடுக்கும்
நம்பிக்கை குறைவிலும்

கடந்த வாழ்க்கையிலும்
இப்படித்தான் என எண்ணி
சோகத்தை கூட்டிகொள்பவரும்
உண்டு

முன்னர் இந்த சிக்கல்களை
சந்தித்த வேளையில்
உத்வேகம் கொண்டு
மீண்டு எழுந்தவைகளை யோசித்து
அடுத்த கட்டநகர்வுக்கு
தயாராபவர்களும் உண்டு

*****

### நமக்கு நாமே

வெற்றியின் சந்தோஷத்தை
இப்போதே அனுபவி
சோகமும் தோல்வியுமா
இந்தமுறைதான்
இது நிரந்தரமில்லை

அவமானமும்
கடும் வசைசொற்களுமா
எப்போதாவதுதான்
வாழ்க்கை முழுவதும் இல்லை

முடிவு எடுப்பதில் குழப்பமா?
இடைவெளிவிட்டு
மீண்டும் யோசி
புதிய தீர்வு கிடைக்கும்

நெருங்கிய மரணமா
அழுது தீர்த்துவிட்டு
அடுத்தவற்றுக்கு
தயாராகத்தான் வேண்டும்
என்ற நிலையாமை
வாழ்க்கை தத்துவங்கள்

பிறருக்கு சொல்லவும்
குழுவாய் இருக்கையில்
பேசவும் முடிகிற நம்மால்

அது நிகழும் கணத்தில்
நமக்கு நாமே
சொல்லிக் கொள்ள முடிகிறதா?

பெரும்பாலும் இல்லை

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

கடைசியில்
குவளையில் ஒட்டிக்கொள்ளும்
சேமியாவை விடமனமில்லை
அமாவாசை பாயாசம்
***

குட்டியை கவ்வி கொண்டு
பார்க்கும் பார்வை
தாய்க்கான கோவம்
***

முற்றம் இருந்தது
கால் கழுவி உள்ளே சென்றனர்
காய்ச்சல் என்றால்,
என்னவென்பர்கள்
***

தீரும் வரை
பேனா கையிலிருக்க வேண்டும்,
மை அல்ல
கற்பனை
***

பிள்ளையார் எறும்பை கண்டால்
கூறுங்கள்
கூசிக்கொள்கிறேன்
***

இலைகளில்
மச்சம்
நோய் தொற்று
***

தன் விருப்பத்திற்கு
தன்னை வாழ விட
இயற்கை கெஞ்சுகிறது
***

எப்படி விரித்தாலும் மொட்டு பூவாகாது
எப்படி நசுக்கினாலும் பூ மொட்டாகாது
ஆகவே அது அதுதான்
***



மெட்டுக்கள் காதுக்கும்
மொட்டுக்கள் கண்ணுக்கும்
ஆனது.
***

மூத்திரப்பை ஏந்தும் நிலைமையில்
என்னை யாரும்
காணாதீர்கள்
***


பறவை எச்சங்கள்
மேலே விழுந்தால் கோபப்படாதே
வருத்தப்படு
தரையில் விழுந்தால்
அவை மரங்களாகியிருக்கும்

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

# கேலி பேசாதீர்கள்

எவரையும்
உருவத்தை வைத்தோ
நிறத்தை வைத்தோ
பட்டப்பெயர் வைத்து அழைப்பது
உங்களுக்கு இன்பமாக இருக்கலாம்
ஆனால் அவர்கள்
மனம் புண்படும் என்பதை
மறந்து விடாதீர்கள்
முதுகுக்கு பின்சென்று
அவர்களும் உங்களுக்கு
பெயரிட்டு நீங்கள்
அறியாதவாறு
கேலி செய்யலாம்.

அவர்களுக்கு ஏதேனும்
மனதை பாதிக்கும்
செயலொன்று ஈடேறினால்
அதைவைத்து கேலி பேசாதீர்கள்
அதே போன்ற நிகழ்வொன்றில்
நீங்களும் சிக்கி தவிக்கும் நாள்
வெகுவிரைவில் உங்களை
தேடி வரும் என்பதை
நினைவில் கொள்க
சகமனிதனை மதிக்க
கற்றுக்கொள்




கவிஞர் ஞா. கோமதிதேவா, பண்ருட்டி

# காந்தி மகான்

எத்தனையோ மனிதர்கள் பிறக்கலாம் இறக்கலாம். பிறப்பது சம்பவமாகலாம். நாம் வாழ்ந்து காட்டுவது சரித்திரமாக வேண்டும். அகிம்சையை உலகுக்கு உணர்த்தி வழிகாட்டிய பெருந்தலைவர்.

தமிழ்நாட்டிற்கு பலமுறை வந்த அவர், ஒருமுறை நம் நாட்டு விவசாயிகள் மேல் சட்டை இல்லாமல் உழவு செய்து கொண்டிருக்கும்போது கண்ட அவர் இனி தானும் மேல் சட்டை அணியப் போவதில்லை என்று உறுதி பூண்டார். இறக்கும் வரை அப்படியே வாழ்ந்து காட்டியவர். சும்மாவா கிடைத்தது நமக்கு சுதந்திரம்? அடிமை இந்தியாவை மீட்ட உத்தம புருஷன்.

பலமுறை சிறை சென்று நிறைய துன்பங்களை அனுபவித்தவர். இறுதிவரை நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் பாடுபட்ட உத்தம தலைவர்.
சத்திய சோதனை என்ற புத்தகத்தை எழுதியும் அதன்படி வாழ்ந்தும் காட்டியவர். உலகம் உள்ளளவும் அவர் பெயர் நிலைத்து நிற்குமே!



கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

ஆமாம், யாருக்குதான் உயரிய நம்பிக்கை இல்லை? அந்நம்பிக்கையைப் பெறும் பாக்கியமே நட்பு ஆகும். மனிதன் பிறந்து வளர்ந்து பள்ளிப் பருவம் காணும்வரை பெற்றோருடனும் உற்ற உறவினருடனும் வாழ்கிறான். ஆனால் பள்ளிப் பருவத்தைத் தாண்டியபின் அவனுக்குள் ஓர் உயிராக கலந்து விடும் பெரிய பாக்கியமே நட்பு.



பெற்றோர்களாயினும் உடன்பிறப்பாயினும் சில விஷயங்களை அளவாகவே வெளிப்படுத்த முடியும். ஆனால் மனம் அதிகம் நெருங்கி கொள்ளும் பெரிய உறவு - நட்பு தான். அந்த நட்பிடம் தான் மனத்தின் குமுறல்கள் யாவையும் எந்த வளைவு, சுளிவு, நெளிவுமின்றி ஒப்புவிக்க முடிகிறது.

அதுபோல், எச்சில் உணவையும் பகிர்ந்து உண்ணும் உறவும் நட்பில்தான் உண்டு. காரியம் முடிந்தவுடன் தள்ளி வைக்கப்படுவதில்லை நட்பினுள்.

தாகம் தண்ணீரைத் தேடுவதைப்போல, மனக் கசப்புகளும் தவிப்புகளும் நட்பைத் தேடி ஓட வைக்கும். எத்தனை கோடி உறவுகள் இருந்தாலும், அதில் ஒரே ஒரு நட்பு தான் சிறப்பாக இருக்கிறது என்று மனம் சொல்வது உண்மை.
கல்லுமனதையும் கரைக்கும் —— நட்பின் பரிந்துரை சொன்னால் பிழையாகாது. இவ்வாறு நட்பாய் கொண்டாடியவரிடம் எந்த இரகசியத்தையும் மறைத்து வைத்திருப்பது இல்லை. சொல்லாமல் இருந்தாலும் மனம் தினமும் சொல்வதற்கு தூண்டும்.

அதன்படி நாமும் வெளிப்படுத்தி, நம் நட்பின் தரத்தை உயர்த்திக்

கொண்டிருப்போம். ஆனால் அவர்கள் அதனை காப்பாற்றாமல், வெளிப்படுத்தி, நாம் சொன்னதையே பரப்பி விட்டால்? அப்போது கிளம்பும் பேரலைப் புரட்சியை விட, மனம் ரணமடைந்து சிதறும். துரோகத்தை எண்ணி வலியில் கதறும்.

அந்த வலியை எந்த வகையிலும் நீக்க முடியாது. அவர்களுக்கோ அது பெரிய இன்னல் ஈனச் செயல் என்று கூடத் தெரியாது. அவர்கள் சாதாரணமாக உலாவிக் கொண்டே இருப்பார்கள். யாருக்காகவோ பாதுகாத்துவைத்த ரகசியத்தை வெளிப்படுத்துவது நியாயமா?
என் தரப்பில் இது பெறும் குற்றம். பச்ச துரோகிகள் வாழத் தகுதியற்றவர்கள். ஆம், இவர்களை நம்பிய குற்றத்துக்காக — நம்பியவர்களே வாட வேண்டியதாகிறது.

எந்த சந்திப்பும் ஆரம்பத்திலே உரிமையையோ, உயர்ந்த குணத்தையோ தருவதில்லை.அப்படி தர கொஞ்சம் காலம் எடுக்கும் போது, நம் இயல்புகளால் அவர்களோடு ஒன்றிப்போவது தான் மனம்.

சிறுமையாக கூட உணர்ந்து, தாழ்ந்து போனாலும் நட்பை யாரும் கொஞ்சைப்படுத்துவதில்லை. ஆனால், எப்படி இவர்களால் முடிந்தது இவ்வாறு செய்ய? மனம் கேட்காமல் மீண்டும் மீண்டும் தன்னுள் புலம்பிக் கொண்டே இருக்கும்.

இவ்வாறானவர்களை பாம்பைவிட மோசமானவர்கள் என்று சொல்லலாம். ஏனெனில் பாம்பு ஒருமுறை மட்டுமே கடிக்கும்; ஆனால் இவர்கள் எப்போது வேண்டுமானாலும் நஞ்சு பாய்ச்சுவார்கள். திரும்பி வந்து "நாம் மாறிவிட்டோம்" என்று சொன்னாலும், அவர்களின் இயல்பு ஒருபோதும் மாறாது. அவர்களோடு மீண்டும் பழகுவது நம் மனத்தின் இரண்டாவது துரோகத்தை தான் சந்திக்க நேரும் கவனமுடன் செயல்படுங்கள்.


தேடலாகும்...

கவிஞர் சஃஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி, புத்தளம் (இலங்கை)

கோபி சேகுவேரா ; வெளியீடு படைப்பு பதிப்பகம் கடலூர்
முதல் பதிப்பு 2023 ; பக்கம் 84 ; விலை ரூபாய் 100

வாய்தாவிலிருக்கும் பணத்திலிருந்து வாய் தாவென ஏங்கும் முத்தம் வரை. கல்வியும் சமத்துவமும் நீதியும் எல்லா மக்களுக்கும் பொதுவானதும் அவசியமானதும் என்ற அடிப்படை உணர்வை எல்லோருக்கும் விதைக்கும் பணியைச் செவ்வனே செய்வன கவிதை அடங்கிய இலக்கியம் எனலாம். கவிதையின் வழியே காலத்தின் நடையை சுட்டிக்காட்டும் கண்ணாடியாகவும் கவிஞனால் மாற முடிகிறது. காலத்தின் போக்கை மாற்றியமைக்கும் பாதையைக் காட்டவும் அவனால் வார்த்தைகளை உருவாக்கவும் முடியும்.

அட்டைப்படமே உங்களுக்கு கவிதைகளின் இந்த நூலின் அகத்தை வெளிச்சம் போட்டு காட்டி விடும். சமகால அரசியலின் போக்கையும் அதன் வழியே மக்கள் ஏமாற்றப்படும் அவலத்தையும் துணிச்சலுடனும் நேரடியாகவும் பேசி செல்லும் கவிதைகள் நூல் முழுக்க தகிக்கின்றன




இன்றைய அரசியல் சூழல் ஒருவரும் மக்களை நம்ப வைக்கும் கவர்ச்சி கொள்கைகளிலும் எல்லாவற்றையும் செய்து முடித்து விடுவோம் என்ற வெற்று வாக்குறுதிகளிலும் ஒளிந்து கிடக்கிறது அதை தங்களின் வாழ்க்கையை மீட்க வந்த விடிவெள்ளியாக எண்ணிக் கொண்டு மக்கள் தங்கள் ஒட்டுமொத்த சமூகத்தையே அவர்களிடம் ஒப்படைத்துவிட்ட நிகழ்வும் அதைத்தொடர்ந்து அவர்களின் வாழ்வு எப்படி மாறிப்போனது என்பதையும் நூலின் கவிதைகள் நேரடியான மொழியில் எழுதிப் பார்க்கின்றன.

கவிஞர் இளையவன் சிவா

வாக்கு சேகரித்தலுக்காக வெற்று உறுதிமொழிகளை வழங்கும் அரசியல் தனத்தை பகடி செய்து நின்று விடாமல் தேசத்தின் நோய் போக்கும் வேதனையை வெளிப்படுத்தி எப்படியாவது அரசியல் சுத்தமாகி மக்களுக்கான ஜனநாயகத்தை நிலை நிறுத்துவதில் அரசியல்வாதிகள் முழு மனதோடு செயல்பட வேண்டும் என்ற பேராவல் கவிதைகளில் ஒளிந்து கிடக்கிறது

மதத்தைப் பிடித்து தொங்கிக்கொண்டு மாற்ற முடியாத, மன்னிக்க முடியாத தத்துவங்களை கூறி மக்களின் மனதை திசை திருப்பும் மத அரசியல் மீதான கோபமும் சுயலாபத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் சாதிய ஆணவக் கொலைகள் மீதான விசாரணை நீட்டிக்கும் கவிதைகளும் சமூக நீதியைப் புறக்கணித்து புதிய புதிய சித்தாந்தங்களின் வழி அரசியலை தனதாக்கிக் கொண்ட மக்களின் மீதான வெறுப்பும் கவிதைகளுக்குள் எழுந்து வரும் வரிகளை எரிமலையின் கொதிப்புகளாக மாற்றி விடுகின்றன.

"வந்து சேர்ந்திருக்கும் 15 லட்சத்தை கொஞ்சம் செலவிடாமல் இருங்கள். உங்கள் மகன் அல்லது மகளின் நீட் பயிற்சி கட்டணத்தை கட்டுவதற்காக அது பயன்பட்டுப் போகட்டும். வந்து சேர்ந்திருக்கும் 15 லட்சத்தைப் பற்றி எந்தக் கவலையும் இல்லாமல் இருங்கள்.
சாதி மத வெறியால் நீங்களும் உங்கள் குடும்பமும் ஒரு நாள் கொலை செய்யப்பட்டால் இழப்பு நிதியாக அது பயன்பட்டுப் போகட்டும்."

"ஊர்த் தெரு

உடைபட்ட எலும்போடும் அறுபட்ட கழுத்தோடும்
சேரியில் வாழும்
காந்திக்கும் நேருவுக்கும்
ஊர்த் தெருக்களில்
புத்தகம் ஏந்திக் கொண்டு
ஒரு அம்பேத்கர் கூட

கவிஞர் இளையவன் சிவா

துணைக்கு இல்லை"

சாதிய மலம்

கேட்பதற்கு வெட்கமாகத்தான் இருக்கிறது
உங்களின் மலம் மாதிரிகளை தர முடியுமா?
உங்கள் உடலெங்கும் அப்பியிருக்கும்
சாதியின் உண்மைத் தன்மையை அறிய
எங்கள் குடிநீர்த் தொட்டியிலிருந்து வந்து கொண்டிருக்கும்
மலத்தண்ணீரோடு காத்துக் கொண்டிருக்கிறோம்".

"நான் வாழ்வின் கொண்டாட்டங்களை
வெகுவாக கொண்டாடித் தீர்ப்பவன்
ஆதலால் என்னை முத்தமிட நிச்சயம் உன் உதடு வேண்டும்.''

"நீ நெருங்க நெருங்க மாதக்கடைசியின் இயல்பாய் தலை சுற்றித் தடுமாறிப் போகிறேன்"


"என் நிழல் ஒழுகும்
என் அறையெங்கும் பிரம்மாண்ட அன்போடு
மீடக முடியாத பிரகாசங்களை அணுஅணுவாக வழிநடத்தி வந்து
என்னை விட்டு விலக மனமில்லாமல்
மனம் பிறழ்ந்து என்னோடே சூழ்ந்து கொண்டிருக்கிறது
என் இனிய தனிமை."

இப்படியாக உண்மையின் வரிகளுக்குள் மக்களை முட்டாளாக்கும் கொள்கைகளின் மீதான சவுக்கடியும் சாதியத் திமிரின் மீதான கத்திக் குத்தும் அவரவர் உணவை அடுத்தவர் தீர்மானிக்கும் அதிகாரத்தின் மீதான பறையடியாகவும் கவிதைகள் எழுந்து நிற்கின்றன.

அரோமா பேக்கரியில் வைத்து இளையராஜாவின் இசையை ஒலிபரப்பி ஒரு ஆனியன் தோசையை வாங்கிக் கொடுத்தால் கோபி சேகுவேராவிடமிருந்து அனைத்தையும் நாம் எழுதி வாங்கி விட முடியும். அந்த அளவிற்கு இசையரசனின் இசையில் தன்னை மறந்த நினைவுகளையும் நூலின் கவிதைகள் வெளிப்படுத்தி விடுகின்றன.

ஒருபுறம் நேரடியான அரசியல் தாக்குதல் நிகழ்த்தும் கவிதைகளில் கொதிக்கும் மனதை மறுபுறம் முத்தங்களாலும் காதலாலும் மனமுழுக்க நிரப்பி மகிழும் அன்பை பேசுகிறது கோபியின் எழுத்தில் இளமையின் குதியாட்டமும் குதூகலமும். ஆற்ற முடியாத கோபத்தை சமூகத்தின் மீதான மன்னிக்க முடியாத வெறுப்பை சரி செய்வதற்கான வழிகளை தேடும் அதே நேரம் கொதிநிலை மனதை குளிர்ச்சியாக்கிக் கொண்டு காதலுக்குள் பொங்கும் கருணையையும் அன்பையும் சமூகத்தை நோக்கி நீட்டவும் செய்கிறது கவிதை வரிகள்.

காத்திரமாக ஆத்திரம் கொள்ளும் கவிதைகளில் எரிமலை வெடிக்கும் அதே தருணத்தில் காதலில் கசிந்துருகி முத்தத்திற்கு ஏங்கும் போது குளிர்ச்சியில் தவிக்கும் மனமும் வாய்க்கப்பட்டிருக்கும் கவிஞர் கோபி சேகுவேரா நேரடியான தாக்குதலில் எல்லாவற்றையும் போட்டு உடைத்து விடுகிறார். அரசியல் ஆனாலும் காதலானாலும் எதையும் மறைத்துப் பார்ப்பதே இல்லை. பொறியியல் மூளையில் புறப்படும் புதிய புதிய சொற்களை வாசிக்கும்போது இயல்பான மனிதர்களிடமிருந்து சற்று விலகி நின்று ரசித்துப் பார்க்கும் மனநிலை நமக்கு கை கூடுகிறது.




கவிஞர் இளையவன் சிவா

## பிறப்பு, கல்வி


சோமசுந்தர பாரதியார்
(1879 – 1959)

நாவலர் சோமசுந்தர பாரதியார் ஜூலை 27, 1879 அன்று எட்டயபுரத்தில் சுப்பிரமணிய நாயகருக்கும் முத்தம்மாளுக்கும் ‘ பிறந்தார். இவருடைய இயற்பெயர் சத்தியானந்த சோமசுந்தரம். சோமசுந்தர பாரதியார் எட்டயபுரம் அரண்மனையில் அரசியாரின் அரவணைப்பில் வளர்ந்தார். இளமையில் பாரதியாருடன் நட்பு கொண்டிருந்தார். தனது தொடக்கக் கல்வியை எட்டயபுரத்திலும் இடைநிலைக் கல்வியை நெல்லையிலும் முடித்ததார்.

எஃப்.ஏ. முடித்ததும் கிறிஸ்தவக் கல்லூரியில் (இன்றைய தாம்பரம் கிறிஸ்தவக் கல்லூரி) பி.ஏ. வரலாறு படித்தார். 1901-1903 வருடங்களில் இக்கல்லூரியில் மறைமலையடிகளும், பரிதிமாற்கலைஞரும் தமிழாசிரியர்களாக இருந்தனர். சென்னை சட்டக் கல்லூரியில் படித்து 1905-ம் ஆண்டில் சட்ட இளவர் பட்டமும் (Bachelor of Law) பெற்றார். தேர்வு எழுதிய உடனேயே வருவாய்த்துறையில் வேலையும் கிடைத்தது. அங்கு ஓர் ஆண்டு வேலை பார்த்து, பின் தூத்துக்குடியில் குடியேறினார். தூத்துக்குடியில் வழக்கறிஞராகத் தொழிலாற்றியபொழுது தானே பயின்று 1913-ம் ஆண்டில் முதுகலைப்பட்டம் பெற்றார்.

## தனிவாழ்க்கை

1894-ல் சோமசுந்தரத்திற்கு 15 வயதில் கடம்பூர் மீனாட்சியுடன் திருமணம் நடந்தது. இவர்களுக்கு இராசராம் பாரதி, இலக்குமிரதன் பாரதி என்னும் மகன்களும் இலக்குமி பாரதி என்னும் மகளும் பிறந்தனர். தனது 48-ம் வயதில் சோமசுந்தர பாரதியார் திருவெட்டாற்றில் டிசம்பர் 1, 1927-ல்

வசுமதியை மணந்தார். இவர்களுக்கு மீனாட்சி மற்றும் லலிதா ஆகிய இரு மகள்கள் பிறந்தனர். 1906-1959 ஆண்டுகளில் சோமசுந்தர பாரதியார் முழுநேர வழக்குரைஞராக இருந்தார்.

## இலக்கியவாழ்க்கை

நாவலர் சோமசுந்தர பாரதியார் பத்து நூல்கள் எழுதியுள்ளார். பெரும்பாலும் இலக்கியக் கூட்டங்களிலும் காங்கிரஸ் மேடைகளிலும் பேசுவதிலேயே இவரது நேரம் கழிந்திருக்கிறது. இளமையிலேயே தமிழிலக்கியத்தில் ஈடுபாடுகொண்டிருந்த சோமசுந்தர பாரதியார், பின்னாளில் தமிழிலக்கிய, இலக்கண ஆராய்ச்சியிலும் படைப்பிலக்கியத்திலும் ஈடுபட்டார். 1932 -1933-ம் ஆண்டுகளில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளராக இருந்தார். தமிழிசைத் துறைக்கும் தலைவராக இருந்தார். இக்காலத்தில் பண்டிதமணி கதிரேசன் செட்டியார். ஏ.சி. செட்டியார், வேங்கடசாமி நாட்டார் போன்றோர் இவரின் சக ஆசிரியர்களாய் இருந்தனர். நாவலரின் மாணவர்கL க. வெள்ளைவாரணர், அ.ச.ஞானசம்பந்தம், அ.மு. பரமசிவானந்தம் போன்றோர்.

## நூல்கள்

சோமசுந்தர பாரதியார் சங்ககால வஞ்சி நகரம் பற்றி எழுதிய நூலும், 'சேரர் தாய் முறை' என்ற நூலும் நாவலரின் ஆராய்ச்சி நெறிமுறைக்குச் சான்றாக இருப்பன. வஞ்சி நகரம் பற்றிய நூல் 'Some Studies about the Chera of Yore' என்னும் தலைப்பில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது சேரர் தாய்முறை என்ற நூல் பண்டைத் தமிழகத்தில் தாய்வழி சமூக மரபு இருந்திருக்கிறது என்று நிறுவுகிறது. இந்த நூல் பதிற்றுப்பத்தின் வழி பண்டைய உறவுமுறைகளையும், வம்சாவழியையும் ஆராய்கிறது. இதுவும் 'System of Succession in Chera kingdom' என்ற தலைப்பில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

**கவிதைகள்**

நாவலர் எழுதிய 'மாரிவாயில்', 'மங்கலக் குறிச்சியில் பொங்கல் விழா' இரண்டும் கவிதை நூல்கள். அர்ஜுனன் பாண்டியன் மகளுக்குத் தூது விடுப்பது போன்ற அமைப்புடைய 122 பாடல்களைக் கொண்ட சிற்றிலக்கியம் 'மாரிவாயில்'. 'மங்கலக்குறிச்சியில் பொங்கல் விழா' நூல் பொதியமலையில் நிகழ்வதாகப் புனையப்பட்ட காதல் கதை.

**உரைகள்**

சோமசுந்தர பாரதியார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதுகலை வகுப்பு மாணவர்களுக்குத் தொல்காப்பியம் பொருளதிகாரத்தைப் பாடம் நடத்தியபோது மாணவர்கள் எழுதிய குறிப்புகளின் அடிப்படையில் எழுதப்பட்ட நூல் 'தொல்காப்பியம், பொருட்படலம் - புதிய உரை'. இது 1942-ல் வெளியானது.

1997-ல் 'நாவலர் ச. சோமசுந்தர பாரதியாரின் நூல் தொகுதி - 2, தொல்காப்பியர் பொருட்படலப் புத்துரை' என்னும் தலைப்பில் பொ.வெ. சோமசுந்தரனார் தொல்காப்பிய பொருளதிகாரத்திற்கு எழுதிய உரைகள் அனைத்தையும் திரட்டி மதுரை ச. சாம்பசிவனாரை பதிப்பாசிரியராகக் கொண்டு நாவலரின் மகள் மருத்துவர் லலிதா காமேசுவரன் அந்நூலை வெளியிட்டார்.

சிலப்பதிகாரத்தைப் பாடம் நடத்தியபோது மாணவர்கள் எழுதிய குறிப்புகளைக் 'கானல்வரி' என்னும் தலைப்பில் தெ.பொ.மீனாட்சிசுந்தரம் நூலாக வெளியிட்டார். நச்சினார்க்கினியர், பரிமேலழகர் இருவருமே வடமொழி நூல்களை மேற்கோள் காட்டுபவர்கள். இவர்கள் தங்கள் காலக்கட்டத்தைப் பிரதிபலிப்பவர்கள் அல்லர் என்று கருதினார்.

## கட்டுரைகள்

சோமசுந்தர பாரதியார் பல்வேறு இதழ்களிலும், மலர்களிலும் எழுதிய கட்டுரைகள் 'நற்றமிழ்', 'பழந்தமிழ் நாடு' என்னும் தலைப்புகளில் நூல்களாக வந்துள்ளன. தொகுக்கப்படாத கட்டுரைகளும் உள்ளன. இவரது ஆங்கில நூல் 'Tamil Classics and Tamilakam'. சங்கப்பாடல்களில் குறிக்கப்படும் கரிகாலனும் திருமாவளவனும் வேறானவர்கள். மதுரை கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை சீத்தலைச் சாத்தனாரினின்று வேறானவர், மெய்கண்டாரின் சிவஞானபோதம் மொழி பெயர்ப்பல்ல என்பன போன்ற கருத்துகள் இவரது கட்டுரைகளில் காரசாரமாய் விவாதிக்கப்படுகின்றன.

## சொற்பொழிவாளர்

சோமசுந்தர பாரதியார் ஆகஸ்ட் 16, 1916 அன்று கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் 'தசரதன் குறையும் கைகேயி நிறையும்' என்னும் தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவு இதே தலைப்பில் பின்னர் நூலாக வெளியிடப்பட்டது.

மதுரைத் தமிழ்ச் சங்கமும் இளம் கிறித்துவ ஆடவர் சங்கமும் (YMCA) மதுரையில் ஜனவரி 26, 1926 அன்று நடத்திய ஆய்வரங்கிலும், நடைபெற்ற கூட்டத்திலும் சோமசுந்தர பாரதியார் திருவள்ளுவர் பற்றி ஆற்றிய உரைகள் பின்னர் 'திருவள்ளுவர்' என்னும் நூலாக மதுரைத் தமிழ்ச் சங்கம் வழியாக உ.வே.சா உதவியுடன் வெளிவந்தது.

திராவிடக் கழகம் கம்பராமாயணத்தையும் பெரிய புராணத்தையும் எரிக்க வேண்டும் என இயக்கம் நடத்தியது. அதன் ஒருபகுதியாக நடைபெற்ற பட்டிமன்றத்தில் சோமசுந்தர பாரதியார் கலந்துகொண்டு கம்பராமாயணத்தை எரிக்கக் கூடாது என அண்ணாதுரையுடன் வாதிட்டார். அச்சொற்பொழிவு 'தீபரவட்டும்' என்னும் நூலில் இடம்பெற்றிருக்கிறது.

திரு. அ. வில்சன், இதழாசிரியர்

கரந்தைத் தமிழ்ச்சங்கக் கூட்டம் ஒன்றில் (1916) 'தசரதன் நிறையும் கைகேயியின் குறையும்' என்னும் தலைப்பில் இவர் பேசினார். இலக்கியக் கதாபாத்திரங்களை முழுமையான விமர்சனத்துக்கு உட்படுத்தும்போது பொதுவான சட்டங்களையும் காலப்பின்னணியையும் துணையாகக்கொள்ள வேண்டும் என்னும் முன்னுரையுடன் தசரதனை விமர்சிக்க ஆரம்பித்த இவரின் வாதம் அப்போதே சிறு பிரசுரமாக வந்தது. 1916 - 1919-ம் ஆண்டுகளில் இதே தலைப்பில் மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி எனப் பல இடங்களில் பேசிய பேச்சு விரிவாக அப்போது நூலாக வந்தது. சோமசுந்தர பாரதியார் முன்வைத்த கருத்துகள் இவருக்கு எதிரான ஒரு கூட்டத்தையும் உருவாக்க காரணமாயிருந்திருக்கின்றன.

### விருதுகள்

1944 - ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் மன்றம் சோமசுந்தர பாரதியாருக்கு நாவலர் பட்டம் வழங்கியது

1954 - மதுரைத் திருவள்ளுவர் கழகம் சோமசுந்தர பாரதியாருக்கு கணக்காயர் விருது அளித்தது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அதன் வெள்ளி விழாவில் சோமசுந்தர பாரதியாருக்கு மதிப்புறு முனைவர் பட்டம் வழங்கியது.

1959 - மதுரையில் சோமசுந்தர பாரதியாரின் 80-ம் அகவை நிறைவுப் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது.

1959 - மதுரை நகரவையும் தமிழகப் புலவர் குழுவும் இணைந்து சோமசுந்தர பாரதியாருக்குப் பாராட்டுக் கூட்டம் நடத்தினர்.

### இறுதிக்காலம்

டிசம்பர் 14, 1959-ல் சோமசுந்தர பாரதியார் காலமானார். டிசம்பர் 15 அன்று அவரது உடல் பசுமலையில் எரியூட்டப்பட்டது. 1998-ம் ஆண்டு சோமசுந்தர பாரதியின் நூல்கள் தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டன.

திரு. அ. வில்சன், இதழாசிரியர்

## நாளை நமதே

# மனதால்

# வலிமை கொள்

# உன்னை வீழ்த்த

# யாரும் இல்லை

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை




தொடர்பிற்கு :
9597887847
8870884969


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com